# <u>குளித்தலை நகராட்சி</u>

18.06.2018.ஆம் தேதி திங்கட்க்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைகளின்படி, இந்நகரில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை தரம்பிரித்து நுண்உரக்கிடங்கு அமைத்து, உரமாக மாற்ற, நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் நவீன உரக்கிடங்கில் கொட்டப்பட்டு உள்ள குப்பைகளை பயோ மைனிங் முறைப்படி அப்புறப்படுத்தவும், முதன்மை சேகரிப்பு பணிகளுக்கு 3 பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் வாங்கவும், கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1) | வார்டு எண்.24,அண்ணாநகர் பூங்கா மற்றும் வார்டு எண்.14, ஜெய்மகால் அவென்யூ பூங்கா–2 ஆகிய இடங்களில், தலா 2TPD கொள்ளவுகளின்படி நுண்உர கிடங்குகள் அமைத்தல் | 70.00 |
| 2) | முதன்மை சேகரிப்பு பணிகளுக்காக பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் 3 எண்ணிக்கை வாங்குதல் | 5.40 |
| 3) | குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் நவீன உரக்கிடங்கில் பயோமைனிங் முறையில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்றுதல். | 335.00 |
| | மொத்தம் | 410.40 லட்சம் |
| (ரூபாய் நானூற்று பத்து லட்சத்து, நாற்பதாயிரம் மட்டும்) | | |

மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதிபெற நகராடசி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). நகராட்சி நிதிநிலையை கருத்தில்கொண்டு, மதிப்பீட்டுத் தொகை முழுவதும் முழுமான்யமாக வழங்க கோரலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

*******

**<u>குளித்தலை நகராட்சி</u>**

18.06.2018.ஆம் தேதிய சிறப்புக்கூட்டத் தீர்மானத்தின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 111 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.